விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 171 வள்ளுவர் ஆண்டு 2057 வைகாசி 25 திங்கட்கிழமை (08.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## அச்சுவேலி வளலாயில் 230 கிலோ கஞ்சா மீட்பு



15ஆம் பக்கம் பார்க்க

செம்மணி மனிதப் புதைகுழி

## 300ஐ தாண்டிய என்புத் தொகுதி



(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இதுவரையான காலப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை நேற்றுடன் 300ஐக் கடந்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

பொலிஸ், காணி அதிகாரம்

# வடக்கிற்கு வழங்கினால் ஒற்றை ஆட்சியை இழப்போம்!



## பதறுகிறார் சரத் வீரசேகர

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அது பிரச்சினை இல்லை. ஆனால் தேர்தல் நடத்தி, வடக்கு மாகாண சபைக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கினால் பிரச்சினை ஏற்படும் என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

புங்குடுதீவு கடலில் மாயமான

## கடல்தொழிலாளர்கள் நேற்று பத்திரமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடு தீவு கடற்பகுதியில் கடற்



16ஆம் பக்கம் பார்க்க

பாழடைந்த கிணற்றிலிருந்து

## வனவள அதிகாரி சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் காணாமல் போயிருந்த வனவள வட்டார அதிகாரி பாழடைந்த கிணற்றிலிருந்து 02ஆம் பக்கம் பார்க்க

ஆலயத்தில் நடந்த பயங்கரம்

## தாய் மீது தாக்குதல் மகன் படுகொலை

(வவுனியா)

ஓமந்தைப் பகுதியிலுள்ள ஆலயமொன்றில் வலுக்கட்டாயமாக பூசை செய்ய முயன்றதைத் தட்டிக்கேட்ட தாய்



16ஆம் பக்கம் பார்க்க

## வைத்தியசாலையில் சுரேஷ் சலே அனுமதி

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த அரச



15ஆம் பக்கம் பார்க்க

## படகு கவிழ்ந்து விபத்து கடல்தொழிலாளி பலி

அல்லைப்பிட்டியில் துயரம்

(அல்லைப்பிட்டி)

கடும் காற்றுடனான சீரற்ற காலநிலையால் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் கடற்றொழிலாளர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.



02ஆம் பக்கம் பார்க்க

பொதுமக்களுக்கான தினத்தில்

## கூட்டங்களில் பங்கேற்காதிருக்க பிரதேச செயலர்கள் தீர்மானம்

(கொழும்பு)

இன்று 08ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பொது மக்கள் தினமாக ஒதுக்கப்பட்டுள்ள திங்கட்கிழமைகளில் நடத்தப்படும் எந்தவொரு கூட்டத்திலும் தங்களால் கலந்துகொள்ள முடியாது என இலங்கைப் பிரதேச செயலகங்களின் செயலாளர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் தினமான திங்கட்கிழமைகளில் பல்வேறு 15ஆம் பக்கம் பார்க்க

கடும் சீற்றம்

## கடலுக்கு செல்ல வேண்டாம்

(கொழும்பு)

காங்கேசன்துறை முதல் கற்பிட்டி வரையான கடல் பகுதி 15ஆம் பக்கம் பார்க்க

## தனியார் பேருந்து சேவை 50% ஆகக் குறைப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் விலை உயர்வு காரணமாக, தனியார் பேருந்து சேவைகளை 50% வரை குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நுகேகொடையில் நேற்று (07) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரவதைகளைத் தடுப்பதற்கான
# ஐ.நா. உப குழு 15 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரும்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சித்திரவதைகளைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் உபகுழுவின் பிரதிநிதிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.

உறுப்புநாடுகளில் சித்திரவதைகள் இடம்பெறுவதைத் தடுத்தல், வழிகாட்டல்களை வெளியிடல், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பவற்றை பிரதான நோக்கங்களாகக்கொண்டு 2007 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட சித்திரவதைகளைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் உபகுழுவில் 25 சுயாதீன நிபுணர்கள் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் இம்மாதம் 24 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருந்து, பல்வேறு கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளனர். விசேடமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ள ஐ.நா உபகுழுவின் பிரதிநிதிகள், நாடளாவிய ரீதியில் பல்வேறு வகைப்படுத்தல்களின் கீழ் இடம்பெறும் சித்திரவதைகள், அவற்றைத் தடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள், இச் செயன்முறையில் பொலிஸார், சிவில் சமூக அமைப்புக்கள் உள்ளிட்ட ஏனைய பங்காளிகளின் வகிபாகம் என்பன தொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளனர்.

அதேவேளை சித்திரவதைகள் இடம்பெறக்கூடிய சாத்தியப்பாடு உள்ள இடங்களுக்கும் அவர்கள் களவிஜயங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

மேலும் இவ்விஜயத்தின்போது சிவில் சமூகப்பிரதிநிதிகளுடனான பிரத்தியேக சந்திப்பொன்றுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக அறியமுடிகிறது. (ந-7)

## ஏ.ரி.எம் இயந்திரம் யாழ்.போதனாவில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் "தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்" (ATM) யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் கன்னாதிட்டி மக்கள் வங்கியால் இன்று காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்திய மூர்த்தி, கௌரவ விருந்தினராக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எம்.மதியழகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8)

## படகு...

அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜேசுதாஸ் யூலியஸ் சேவியர் (வயது - 62) என்ற 6 பிள்ளைகளின் தந்தையான கடற்றொழிலாளரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, குறித்த கடற்றொழிலாளி அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரப் பகுதியில் கடலட்டைப் பண்ணை வைத்துள்ள நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது பண்ணையில் படகில் இருந்தவாறு கடற்தொழிலில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது வீசிய பலத்த காற்றுக் காரணமாக படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியமையால் அவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## வனவள...

நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் தம்புத்தேகம பிரதேசத்தை சேர்ந்த 41 வயதுடைய ஆராட்சி பண்டாரகே சந்திரவன்சல கோசல விஜய சேகர என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் கிளிநொச்சி ஜெயபுரத்தில் இயங்கும் வட்டார வனவள திணைக்கள அலுவலகத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த நபர் காணாமல் போயிருப்பதாக ஜெயபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் நேற்று மாலை இவரது சடலம் அலுவலகத்திற்கு அருகில் உள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஜெயபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,315,316)

## வடக்கிற்கு...

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதும் வடக்கு மாகாண சபைக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதும் ஒன்றல்ல.

தேவையாயின் மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம். அதனால் பிரச்சினை ஏற்படமாட்டாது.

ஆனால் தேர்தலை நடத்தி வடக்கு மாகாண சபைக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கினால், இந்த நாட்டில் பெடரல் இராஜ்ஜியம் ஏற்படும்.

இது நடக்குமாயின் இதுவரை காலமும் நாம் பாதுகாத்து வந்த ஒற்றையாட்சி முறைமை இல்லாமல் போகும்.

இதனாலேயே இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த எவரும் பொலிஸ், காணி அதிகாரத்தை வழங்கவில்லை.

எனவே வடக்கு மாகாண சபைக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கும் தேசத்துரோகச் செயலை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க செய்யமாட்டார் என நம்புகிறோம் என்றும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். (ந-7)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்...

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்



உங்கள்
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்



தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com



உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!
உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :
தொலைபேசி:
076 097 3127
021 221 7603
/ - 076 636 3378
E.mail: Valampurii@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாடு மீண்டும் வீழ்ச்சியடையாது!

## உறுதிபடத் தெரிவித்தார் பிரதி நிதி அமைச்சர்



**(கொழும்பு)**

**அண்மைக்காலமாக அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்து வருவதானது, இலங்கை மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது என்பதைக் குறிக்கவில்லை என்றும், தவறான பிரசாரங்களை நம்பி பொதுமக்கள் ஏமாற வேண்டாம் என்றும் பிரதி நிதி அமைச்சர் அனில் ஐயந்த பெர்னாண்டோ கேட்டுக் கொண்டுள்ளார்.**

டொலரின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் ரூபாவின் வீழ்ச்சி குறித்து எழுந்துள்ள கேள்விகளுக்கு ஊடகங்களிடம் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள தற்போதைய மாற்றம், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலவரங்கள் உள்ளிட்ட உலகளாவிய வெளிப்புறக் காரணிகளுடன் தொடர்புடையதாகும். இதன் காரணமாகவே, குறிப்பாக இறக்குமதிகளுக்காக அமெரிக்க டொலருக்கான தேவை சந்தையில் தற்காலிகமாக அதிகரித்துள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதாரம் நெருக்கடியில் உள்ளது என்று கூறுவதாயின், அங்கு பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுதல், உற்பத்தித் துறைகள் முடங்குதல், தொழிலாளர் போராட்டங்கள் வெடித்தல் மற்றும் அரசால் தனது செலவினங்களுக்கான நிதியைத் திரட்ட முடியாமல் போதல் போன்ற பாரதூரமான சூழ்நிலைகள் காணப்பட வேண்டும். ஆனால், அத்தகைய எந்தவொரு மோசமான நிலையும் இன்று நாட்டில் இல்லை.

தற்போதைய சூழலில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம், சுற்றுலாத்துறை மூலமான வருவாய் மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பணவனுப்பல் ஆகிய அனைத்தும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

சந்தையில் டொலருக்கான தேவை தற்காலிகமாக அதன் விநியோகத்தை விட அதிகரித்ததே அண்மைக்கால மாற்று வீத உயர்வுக்குக் காரணமாக அமைந்தது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அண்மையில் கிடைக்கப்பெற்ற சுமார் 695 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, நாட்டின் வெளிநாட்டு கையிருப்புகளை வலுப்படுத்தியுள்ளதுடன், வெளிநாட்டுத் துறைசார் ஸ்திரத்தன்மைக்கும் பெரும் ஆதரவாக அமைந்துள்ளது.

டொலரின் பெறுமதி தற்காலிகமாக 350 ரூபாவைத் தாண்டிய போதிலும், மத்திய வங்கியின் கொள்கை ரீதியான தலையீடுகள் மற்றும் துரித நடவடிக்கைகள் காரணமாக அது மீண்டும் 330 ரூபா வரை குறைவடைந்தது.

கடந்த சில நாட்களில் மீண்டும் ஒரு சிறிய உயர்வு காணப்பட்டாலும், சந்தை படிப்படியாக ஸ்திரத்தன்மையடையும் என்ற நம்பிக்கை உள்ளது.

எனவே, தற்போதைய சூழ்நிலையானது தற்காலிகமான ஒரு சந்தை ஒழுங்கமைப்பே தவிர, இது பொருளாதார வீழ்ச்சி அல்ல. பொதுமக்கள் யாரும் அச்சமடையவோ அல்லது வதந்திகளின் அடிப்படையில் அவசர முடிவுகளை எடுக்கவோ வேண்டாம்." என அவர் தெரிவித்தார். (நி)

# மாகாண சபைத் தேர்தலை அரசு திட்டமிட்டு தள்ளிப்போடுகிறது சஜித் சாடல்



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளினால் தற்போதைய அரசாங்கம் அச்சமடைந்துள்ளதாகவும், இதன் காரணமாகவே மாகாண சபை தேர்தல்களை நடத்துவதை திட்டமிட்டு தள்ளிப்போட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுடன் நடை பெற்ற விசேட சந்திப்பொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபைகளை ஒத்திவைக்கும் கோழைத்தனமான அநுரவின் வெறியை தோற்கடிப்போம் என்ற கருப்பொருளின் கீழ் இந்த விசேட கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த பொதுத்தேர்தலுக்குப் பின்னரான மிகக் குறுகிய காலப்பகுதிக்குள், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு சுமார் 23 இலட்சம் வாக்குகள் வரை மக்கள் மத்தியில் இருந்து கைநழுவிப் போயுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள், ஆளுங்கட்சிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு சரிந்துள்ளதை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தல் முடிவுகளின் அதிர்ச்சியால் ஏற்பட்டுள்ள அச்சம் காரணமாகவே, மாகாண சபை தேர்தலை நடத்த தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசு தயங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும், மாகாண சபை முறைமையை மீண்டும் செயற்திறன் மிக்கதாக மாற்றவும் இந்த "தேர்தல் ஒத்திவைப்பு" நடவடிக்கைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து போராட வேண்டும் என முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களுக்கு சஜித் பிரேமதாச அழைப்பு விடுத்துள்ளார். (நி)


# INVITATION FOR BID 2026 / 03
# DELFT PRADESHIYA SABHA

1. The **Chairman, Local Authority Procurement Committee**, on behalf of the Delft Pradeshiya Sabha invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway & building construction for grade mentioned in the table below..
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026.06.08 To 2026.06.22** during **09:00 hrs and 14:00 hrs**.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Delft Pradeshiya Sabha (T.P:0212215211, e.mail: tsecretarydelft@yahoo.com) from 9:00 hrs to 14:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Chairman, Delft Pradeshiya Sabha on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Delft Pradeshiya Sabha as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2026.06.08 To 2026.06.22 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2026.06.15 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 2.00 P.M on 2026.06.23 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(7)/2/PSDG/2025/01 | Establishment of Dress changing room & fresh shower cubicle for ladies at Delft Beach | 4.23 | 90 | C8 or Above (Building) | 3000.00 | 43,000.00 | 08.09.2026 | 10.08.2026 |

**Chairman**
**Local Authority Procurement Committee,**
**Delft Pradeshiya Sabha.**


**08.06.2026**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# முதல் இந்தியராக வரலாறு படைத்த பிரக்ஞானந்தா

## பிரதமர் மோடி வாழ்த்து



நோர்வேயின் ஒஸ்லோ நகரில் நடைபெற்ற புகழ்பெற்ற நோர்வே செஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்று, அந்தப் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற புதிய வரலாற்றுச் சாதனையை பிரக்ஞானந்தா படைத்துள்ளார்.

நோர்வே செஸ் போட்டி கடந்த மே 25 முதல் ஜூன் 5ஆம் திகதி வரை நடைபெற்றது. அதன் பத்து சுற்றுகளும் முடிவடைந்தன. இதில் குகேஷ், பிரக்ஞானந்தா, மாக்னஸ் கால்சன், வின்சென்ட் கெய்மர் போன்ற ஜாம்பவான்கள் கலந்து கொண்டனர்.

நோர்வே செஸ் போட்டியின் பத்தாவது சுற்று நேற்று முன்தினம் நடைபெற்றது. இறுதிச் சுற்றில் ஜேர்மனியின் வின்சென்ட் கெய்மர் மற்றும் பிரக்ஞானந்தா ஆகியோர் மோதினர்.


பரபரப்பாக சென்ற இந்த ஆட்டத்தில் வின்சென்ட் கெய்மரை வீழ்த்தி மொத்தம் 18 புள்ளிகளுடன் இத்தொடரை வென்றார் தமிழக வீரர் பிரக்ஞானந்தா. இதன் மூலம், அவர் இந்த வெற்றியைக் கைப்பற்றிய முதல் இந்தியர் என்ற மாபெரும் பெருமையைத் தட்டிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவிற்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ்தள பதிவில் கூறியிருப்பதாவது,

இந்த மகத்தான சாதனைக்காக பிரக்ஞானந்தாவிற்கு வாழ்த்துக்கள்! இது உண்மையிலேயே அவரது தொடர்ச்சியான சிறப்பை எடுத்துக் காட்டும் ஒரு அற்புதமான மைல்கல். அவரது எதிர்கால முயற்சிகளுக்கு எனது நல்வாழ்த்துக்கள் இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (3)

# இந்திய ரி-20 அணியின் புதிய தலைவராக ஷ்ரேயாஸ் ஐயர் நியமனம்




இந்திய அணியின் தலைவராக செயற்பட்டு வந்த சூர்யகுமார் யாதவ், தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டு அணியின் புதிய தலைவராக ஷ்ரேயாஸ் ஐயர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணி இம்மாத இறுதியில் அயர்லாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுகிறது. அதன் பின், இங்கிலாந்து அணிக்கு எதிராக 5 ரி-20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது.

இந்திய ரி-20 அணியின் தலைவராக செயற்பட்டு வந்த சூர்யகுமார் யாதவின் ஆட்டத்திறன் மிகவும் மோசமாக இருப்பதாலும், அடுத்த ஐசிசி ரி-20 உலகக் கோப்பைத் தொடரை கருத்திற் கொண்டும் அவர் தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கப்படலாம் எனக் கூறப்பட்டு வந்தது.

அதேபோல, அயர்லாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான தொடர்களுக்கான இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட போது, சூர்யகுமார் யாதவ் அணியிலிருந்து நீக்கப்பட்டு புதிய அணித் தலைவராக ஷ்ரேயாஸ் ஐயர் நியமிக்கப்பட்டுள்ளார். (3)

# ஆப்கானிஸ்தான் தொடரிலிருந்து விராட் கோலி விலகல்



ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரிலிருந்து இந்திய அணியின் விராட் கோலி விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐ.பி.எல் தொடரின் இறுதிப் போட்டியின் போது ஏற்பட்ட தொடை நரம்பு உபாதை காரணமாக, அவர் குறித்த தொடரிலிருந்து வெளியேறியுள்ளார்.

இந்திய அணியின் தலைமைத் தேர்வாளர் அஜித் அகர்கர் மற்றும் பிசிசிஐ செயலாளர் தேவஜித் சய்கியா ஆகியோர் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதன்படி விராட் கோலிக்கு பதிலாக இடது கை துடுப்பாட்ட வீரரான யசஷ்வி ஜெய்ஸ்வால் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் இங்கிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் தொடருக்கு முன்னதாக விராட் கோலி உடற்தகுதி பெற்றுவிடுவார் என நம்புவதாக இந்திய அணியின் தலைமை தேர்வாளர் அஜித் அகர்கர் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டி ஜூன் 13 அன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணம் AB அணி 2 ஆவது சுற்றுக்கு தகுதி

கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணத்திற்கான தொடரின் முதலாவது போட்டி கடந்த மே மாதம் 30 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூ ஸ்ரார் அணி 29.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் தர்மிகன்-35, ஹர்ஷன்-28, உதயசேகரன்-18, கிரிசாந்-26 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் தர்மீகன், கிரிசாந், டைனேஸ்வரன், சிவஞீதன் ஆகியோர் தலா 1 இலக்கினை கைப்பற்றினர்.

184 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய AB அணி 30 ஓவர்களின் 4 இலக்குகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் மதன்-19, வக்ஷன்-29, சயந்தன்-69, கஜீபன் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் யு.தர்மிகன், எஸ்.கிரிசாந், டிலஸ்வீரன் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இறுதியில் AB அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரி ஆரம்பக் கல்வி A,C பிரிவு ஆசிரியர் பயிலுனர்களின் ஆக்கங்களைத் தாங்கிய "மலரும் மொட்டுக்கள்" இதழின் வெளியீட்டு விழா கல்லூரியில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்றது. பொறுப்பு விரிவுரையாளர் க.கமலதாசன் இந்நூலை வெளியிட்டு வைக்க பீடாதிபதி ரி. கணேசரட்ணம் பெற்றுக்கொண்டார்.



மக்கள் வங்கியின் யாழ்ப்பாணம் பிராந்திய விளையாட்டுக்கழகம் நடாத்திய விளையாட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் ரி.வேல்நம்பி கலந்து சிறப்பித்தார்.

## யாழ்.இந்துவின் இரு மாணவர்கள் சர்வதேச கணிதப் போட்டிக்குத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரியின் இரு மாணவர்கள், 2026 ஆம் ஆண்டுக்கான சர்வதேச கணிதப் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்போட்டி 2026 ஜூலை 22 முதல் 27 வரை மொங்கோலியாவில் நடைபெறவுள்ளது.

வி. ஸ்ரீவத்சன்- தேசிய தரவரிசையில் 6ஆம் இடத்திலும் சி. அனஹயன் -தேசிய தரவரிசையில் 7ஆம் இடத்திலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (8)



மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி உடற்கல்வி பாடநெறி இரண்டாம் வருட மாணவர்களின் வெளிக்களப் பயிற்சி கல்லூரி வளாகத்தில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் பீடாதிபதி ரி.கணேசரத்னம் மற்றும் உடற்கல்வி பாடபொறுப்பு விரிவுரையாளர்கள் ஏனைய விரிவுரையாளர்கள் மாணவ ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பெற்றோரை பராமரிக்காத பிள்ளைகளுக்கு எதிராக கடும் சட்டம்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

பெற்றோர்களை பராமரிக்காத பிள்ளைகளுக்கு எதிராக கடுமையான சட்டங்களை இயற்றப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பெற்றோரின் சொத்துக்களைத் தங்களின் பெயருக்கு உரிமையாக்கிக் கொண்டு பின்னர் அவர்களைக் கைவிட்டு முதியோர் இல்லங்களில் சேர்க்கும் பிள்ளைகளின் சொத்துக்களை அரசாங்கம் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக தேசிய செயலகத் தின் பணிப்பாளர் சதுர மிகிந்தூன் தெரிவித்தார்.

அவ்வாறு சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டதன் பின்னர் அந்தப் பெற்றோரைப் பராமரிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கும்.

இது தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் திருத்தங்கள் தற்போது சட்ட வரைவுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சில பிள்ளைகள் பெற்றோரின் சொத்துக்களை மிக தந்திரமாக தங்கள் பெயர்களுக்கு மாற்றிக்கொண்டு பின்னர் அவர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்புவதாகவும் கைவிடுவதாகவும் கிடைத்துள்ள முறைப்பாடுகளைக் கவனத்திற் கொண்டே இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.


இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டங்கள் வலுப்படுத்தப்பட்டதன் பின்னர் பெற்றோர்களைக் கைவிடுவதற்கு பிள்ளைகளுக்கு எவ்வித வாய்ப்பும் கிடைக்காது என்றும் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

பெற்றோரின் பாதுகாப்பு அவர்களின் போஷணை மற்றும் ஆரோக்கியம் தொடர்பாக அவசரத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (நி)



(C-513)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படம்:சிவசாந்தன்)

# கிளிநொச்சி திருவையாறு பகுதியில் அன்னாசி அறுவடை நிகழ்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருவையாறு விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட திருவையாறு பகுதியில் அன்னாசி அறுவடை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயத் திணைக் களத்தின் ஏற்பாட்டில், அப்பகுதி விவசாயி ஒருவரின் விவசாய நிலத்தில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு கிளிநொச்சி மாவ ட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் வி. சோதிலட்சுமி தலைமை தாங்கினார்.

அன்னாசி செய்கையின் முன்னேற்றம், உற்பத்தித் திறன் மற் றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக வும் இதன்போது கல ந்துரையாடப்பட்டது டன், அன்னாசி உற்பத்தியை மேலும் விரிவு படுத்துவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன், கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சு.முரளிதரன், வட மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஸ். சிவசிறீ விவ சாயத் திணைக்கள அதிகாரி கள் மற்றும் உத்தியோகத்தர் கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளும் கலந்து கொண்டனர். (8)




கிளிநொச்சி தருமபுரம் பரிலுக்கா முன்பள்ளி மாணவர்களின் சிறுவர் சந்தை முன்பள்ளி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. (படம்: தேவானந்தன்)

# சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதன உரிமையை உறுதிப்படுத்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 07 வாரிவனேஸ்வரா,- புகையிரத நிலைய ஒழுங்கை சாவகச்சேரி, ஆதன இலக்கம் 15 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஜெயபாலரட்ணம் கோபிராஜ் உம் மனைவி அனுசியாவும் என் னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. தற்போது இவர்கள் இவ் ஆதனத்தில் கட்டடம் அமைப்பதற்கு அனுமதிக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்திற்கு இளைப்பாறிய பேராயர் இல்லம், மக்ளியோட் வைத்தியசாலை, இணுவில் சுன்னாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெபநேசன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு பொ.பூலோகசிங்கம் அவர்கள் முகதாவில் 1300 இலக்க 03.05.2012 ஆம் திகதியில் "எனது தாய்வழிப் பாட்டனாரின் முதுசம் எனவும் 32 ஆண்டு காலமாக எனது ஆட்சியில் இருப்பதினாலும் இவ்வாதனத்திற்கு நானே உரித்தாளர்" என்றும் வெளிப்படுத்தி உறுதி முடித்துள்ளார்கள்.

பின்னர் இளைப்பாறிய பேராயர் இல்லம், மக்ளியோட் வைத்தியசாலை, இணுவில் சுன்னாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெபநேசன் மற்றும் ஜெபநேசன் பெண் சீத்தா விமலலக்ஸ்மி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு பொ.பூலோகசிங்கம் அவர்கள் முகதாவில் 1363 இலக்க 18.01.2013 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை புகையிரத நிலைய வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த சாமுவேல் ஜெயக்குமார் கிரிஸ்ரியன் கதிர்காமர் மற்றும் சுனித்திரா செல்வகுமாரி கதிர்காமர் ஆகியோருக்கு வழங்கியுள்ளார்கள்.

பின்னர் புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த சாமுவேல் ஜெயக்குமார் கிரிஸ்ரியன் கதிர்காமர் மற்றும் சுனித்திரா செல்வகுமாரி கதிர்காமர் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு பொ.பூலோகசிங்கம் அவர்கள் முகதாவில் 1367 இலக்க 01.03.2013 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை இளைப்பாறிய பேராயர் இல்லம், மக்ளியோட் வைத்தியசாலை, இணுவில் சுன்னாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெபநேசன் மற்றும் ஜெபநேசன் பெண் சீத்தா விமலலக்ஸ்மி ஆகியோருக்கு வழங்கியுள்ளார்கள்.

பின்னர் இளைப்பாறிய பேராயர் இல்லம், மக்ளியோட் வைத்தியசாலை, இணுவில் சுன்னாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெபநேசன் மற்றும் ஜெபநேசன் பெண் சீத்தா விமலலக்ஸ்மி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு சுதா கஜேந்திரகுமார் அவர்கள் முகதாவில் 1480 இலக்க 27.01.2016 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை தம்பகாமம், பளையைச் சேர்ந்த ஜெயபாலரட்ணம் கோபிராஜ் மற்றும் பெண் அனுசியா ஆகியோருக்கு வழங்கியுள்ளார்கள்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரி இறை பிரதேச செயலர் பிரிவு - தென்மராட்சி உள்ளூர் அதிகாரசபை - சாவகச்சேரி நகரசபை கிராம சேவகர் பிரிவு- J/306 வட்டாரம் -07 ஆதனவரி மதிப்பீட்டு இலக்கம் -15 புகையிரத நிலைய வீதி "இராசாதோப்பு" நில.பர 01 குளி 09.46 இது 2012.03.10ஆந் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா திரு.ரி.தங்கராஜா அவர்களால் அளந்து வரையப்பட்ட 5244ஆம் இலக்கப்படத்தில் சுட்டிய 1ஆம் இலக்கத்துண்டு எல்லை கிழக்கு... கீதாஞ்சலி ஜெபநேசன் கணேசலிங்கத்தினாதனம் வடக்கு.... அரசரட்ணம் பெண் ஜெயசீலியினாதனம் மேற்கு... புகையிரத நிலைய வீதி தெற்கு... செல்லையா கதிரித்தம்பியின் உரிமைக்காரரினாதனம் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளனைத்தும்.

ஜெயபாலரட்ணம் கோபிராஜிம் மனைவி அனுசியாவும் இவ் ஆதனத்தில் கட்டடம் அமைப்பதற்காக சமர்ப்பித்த விண்ணப்பத்திற்கு அங்கீகாரம் வழங்குவதில் ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்தில் கட்டடம் அமைப்பதற்கு விண்ணப்பதாரருக்கு அங்கீகாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**நகராட்சி மன்றம்**
**சாவகச்சேரி.**

(7800)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 450 | 450 | 550 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 180 | -- | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 400 | 470 | 600 |
| தக்காளி | 800 | 700 | 800 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 200 | 140 | 200 |
| கோவா . | 300 | 350 | 350 | 260 | 300 |
| கரட் | 350 | 520 | 500 | 350 | 500 |
| பூசணி | 120 | 140 | 120 | 100 | 150 |
| புடோல் | 250 | 250 | 200 | 230 | 350 |
| வாழைக்காய் | 120 | 80 | 100 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 180 | 240 | 250 | -- | 250 |
| பாகற்காய் | 1300 | 1500 | 2000 | 2000 | 2000 |
| வெண்டக்காய் | 200 | 150 | 300 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 200 | 300 | 400 |
| பயற்றங்காய் | 300 | 400 | 300 | 400 | 400 |
| லீக்ஸ் | 400 | 450 | 500 | 400 | 600 |
| பீற்றூட் | 450 | 500 | 500 | 350 | 500 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 450 | 450 | 800 |
| போஞ்சி | 650 | 600 | 600 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 350 | 300 | -- | 500 |
| கீரை – 1 பிடி | 150 | 120 | 150 | 110 | 150 |
| தேசிக்காய் | 800 | 400 | 400 | 550 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80 | 120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | 350 | 300 |
| வெங்காயப்பூ | 600 | 550 | 800 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 300 | 200 | 180 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | -- | 60 |
| வல்லாரை | 100 | 70 | 80 | -- | 100 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இனவாத அரசியலுக்கு இனி இடமில்லை

## பிரதி அமைச்சர் பிரதீப்



(கொழும்பு)

அரசியல் இலாபங்களுக்காக மீண்டும் நாட்டில் இனவாதத்தைத் தூண்டி, மக்களைக் குழப்ப நினைப்பவர்களின் முயற்சி இனி ஒருபோதும் பலிக்காது என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

"தற்போதைய அரசாங்கம் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சாதகமாகச் செயற்படுகிறது" எனத் தெற்கில் பரப்பப்படும் இனவாதக் கருத்துக்கள் மற்றும் புதிய அரசியலமைப்புக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பிரசாரங்கள் குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், "அரசாங்கம் புதிய அரசியல் யாப்பைக் கொண்டு வந்தாலும், அது நாட்டின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதாகவே அமையும். இது குறித்துப் பொதுமக்களுக்கு உரிய தெளிவூட்டல்களை நாங்கள் வழங்குவோம்.

அரசாங்கம் சரியான பாதையிலேயே பயணிக்கிறது என்பதைப் பெரும்பான்மைச் சிங்கள மக்களும் உணர்ந்துள்ளனர்.

அவர்கள் எமக்கு அமோக ஆதரவை வழங்கியுள்ளனர் எமது அடுத்தகட்ட செயற்பாடுகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார்கள்."

"பாடகரின் கைது என்பது தனிப்பட்ட கோப தாபங்களின் அடிப்படையில் இடம்பெற்ற ஒன்று அல்ல. நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகளின் முடிவில் அவர் குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டால் சட்ட ரீதியாகவே அவர் விடுதலை செய்யப்படுவார்.

அதேபோல, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழர்கள் மட்டுமன்றி பல இனத்தைச் சேர்ந்தவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நாட்டில் நடை முறையில் உள்ள சட்டங்களை மீறி எங்களால் எதனையும் செய்ய முடியாது.

எனினும், சட்டத்தின் பிரகாரம் உரிய நேரத்தில் அரசாங்கம் இதற்கான சரியான முடிவுகளை எடுக்கும்" என்றும் பிரதி அமைச்சர் பிரதீப் வலியுறுத்திக் கூறினார். (நி)

---

## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி - சுன்னாகம்
## சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான
## கேள்வி அறிவித்தல்-2026/2027

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கான சிற்றுண்டிச்சாலையினை 2026.07.01ஆம் திகதி முதல் 2027.06.30ஆம் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விப் பத்திரங்கள் பாடசாலை நிர்வாகத்தினால் கோரப்படுகின்றது. கேள்விப் பத்திரங்கள் யாவும் **"அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.06.25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"சிற்றுண்டிச்சாலை கேள்விப் பத்திரம்"** எனக் குறிப்பிடவும். விண்ணப்பங்களையும், மேலதிக விபரங்களையும் பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**அதிபர்,**
**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.**

(7799)

---

## பெறுகைகளுக்கான அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்
## வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, உள்ளீடுகள் மற்றும் சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகைகள்

**2026.08.01 தொடக்கம் 2027.07.31 வரை**

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணத்தின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, உள்ளீடுகள் மற்றும் சமைத்த உணவு வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ .இல | பெறுகை இலக்கம் | சேவை வழங்கவேண்டிய நிலையம் | பெறுகையின் தன்மை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | தொகுதி .இல | உலர் உணவுவழங்கல் சேவை | தொகை (ரூபா) | காலாவதி திகதி |
| 01. | NP/04/41/05/Diet – Raw Food /JF/01/2026-2027 | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை | 01 | புதிய மரக்கறிகள் மற்றும் பழவகைகள் | 38,000.00 | 27.10.2026 |
| | | | 02 | இறைச்சி, முட்டை, மீன் மற்றும் கருவாடு வகைகள் | 25,000.00 | 27.10.2026 |
| | | | 03 | உலர் உணவு, பக்கற், போத்தல் மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட உணவு வகைகள், பாண், எரிவாயு மற்றும் விறகு | 58,000.00 | 27.10.2026 |
| 02. | NP/04/41/05/Diet – Raw Food /JF/02/2026-2027 | ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி | 01 | புதிய மரக்கறிகள் மற்றும் பழவகைகள் | 31,000.00 | 27.10.2026 |
| | | | 02 | இறைச்சி, முட்டை, மீன் மற்றும் கருவாடு வகைகள் | 16,000.00 | 27.10.2026 |
| | | | 03 | உலர் உணவு, பக்கற், போத்தல் மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட உணவு வகைகள், பாண், எரிவாயு மற்றும் விறகு | 41,000.00 | 27.10.2026 |
| 03. | NP/04/41/05/Diet – Raw Food /JF/03/2026-2027 | ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்துறை | உலர் உணவு வழங்கல் சேவை | | 45.000.00 | 27.10.2026 |
| 04 | NP/04/41/05/Diet – Raw Food /JF/04/2026-2027 | பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை | உலர் உணவு வழங்கல் சேவை | | 22,000.00 | 27.10.2026 |
| 05 | NP/04/41/05/Diet – Raw Food /JF/05/2026-2027 | பிரதேச வைத்தியசாலை, சங்கானை | உலர் உணவு வழங்கல் சேவை | | 38,000,00 | 27.10.2026 |
| 06 | NP/04/41/05/Diet – Raw Food /JF/06/2026-2027 | பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி | உலர் உணவு வழங்கல் சேவை | | 15,000.00 | 27.10.2026 |
| 07 | NP/04/41/05/Diet – Raw Food /JF/07/2026-2027 | பிரதேச வைத்தியசாலை, கோப்பாய் | உலர் உணவு வழங்கல் சேவை | | 31,000.00 | 27.10.2026 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    - அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் /சேவையினை வழங்குவதற்கான வர்த்தக அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 -பெறுகைத் தரவில் ( Section II Bidding Data Sheet) குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் **08.06.2026** ஆம் திகதி முதல் **30.06.2026** ஆம் திகதி வரை வேலைநாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக **ரூபா 3,000.00** அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம். மேலும் மேலதிக தகவல்களை 0212226253, 0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

05. கேள்வி ஆவணங்கள் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கேள்விப் பத்திர மூலம் வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, உள்ளீடுகள் மற்றும் சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகை விண்ணப்பம் ( வைத்தியசாலையின் பெயர்) - பெறுகை இலக்கம்....." எனக் குறிப்பிட்டு 01.07.2026 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **"தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு இரு பிரதிகளில் பதிவுத் தபாலிலோ அல்லது **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் அலுவலகத்திலுள்ள** பெறுகைப் பெட்டியினுள் நேரடியாக இடப்படுவது மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

06. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 17 ஆம் திகதி யூன் மாதம் 2026 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

07. கேள்வி ஆவணத்தின் செல்லுபடியாகும் காலம் 90 நாட்கள் **(29.09.2026)** ஆகும். கேள்விதாரர்கள் மீளளிக்கத்தக்க கேள்வி வைப்பு உத்தரவாதத்தை வழங்க வேண்டும். அட்டவணையிலுள்ள தொ.இல 01 -02 வரையான ஆதார வைத்தியசாலைகளுக்கு கேள்விதாரர் தொகுதி வாரியாக தனித்தனியேயும். மற்றும் அட்டவணையில் உள்ள தொ.இல 03-07 வரையான ஆதார மற்றும் பிரதேச வைத்திய சாலைகளுக்கு தனியான கேள்வி உத்தரவாத முறி சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி ஆவணத்தில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய கேள்வி உத்தரவாத முறியினையும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வர்த்தக வங்கியிடமிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது அட்டவணையில் குறிப்பிட்டவாறு கேள்வி உத்தரவாத முறியினை வைப்பாக **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பணமாக செலுத்துதல் வேண்டும். கேள்வி பிணை முறியினது காலாவதி திகதி 27.10.2026 ஆகும்.

08. இவ் விலை மனுக்கோரலை எந்தவொரு கட்டத்திலும் முழுமையாகவோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.


**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
**[illegible], 021-221-4966 தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்:** rdhsjaffna 15@gmail.com

(C-5798)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

## மூடப்பட்ட உகண்டா-கொங்கோ எல்லை
# பலகோடி ரூபா மதிப்பிலான உணவுப்பொருட்கள் அழுகி நாசம்




(ஹம்பாலா)

உகண்டா மற்றும் கொங்கோ ஜனநாயகக் குடியரசு இடையேயான எல்லைப் பகுதியில் எபோலா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காகக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, எல்லைகள் மூடப்பட்டுள்ளதால் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் முற்றிலும் முடங்கியுள்ளது.

எபோலா வைரஸ் உகாண்டாவுக்குள் பரவாமல் தடுக்கும் நோக்கில் அந்நாட்டு அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக, எல்லையின் இருபுறமும் நூற்றுக்கணக்கான சரக்கு லொறிகள் நீண்ட தூரத்திற்கு அணிவகுத்து தேங்கி நிற்கின்றன.

இந்த லொறிகளில் ஏற்றி வரப்பட்ட பழங்கள், காய்கறிகள் உள்ளிட்ட எளிதில் அழுகக்கூடிய உணவுப் பொருட்கள் பல நாட்களாகக் காத்திருப்பதால் லொறிகளிலேயே அழுகி வீணாகி வருகின்றன.

இதனால் தங்களுக்குப் பல கோடி ரூபாய் அளவில் கடுமையான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக இரு நாட்டு வர்த்தகர்களும் பெரும் கவலை தெரிவித்துள்ளனர். (3)

## அமெரிக்கா – ஈரான் போர் நிறுத்தம்
# டெஹ்ரானில் தரையிறங்கிய பாகிஸ்தான் தூதுக்குழு



(டெஹ்ரான்)

அமெரிக்கா – ஈரான் போர் நிறுத்த விவகாரங்கள் குறித்து கலந்துரையாட பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மொஹ்சின் நக்வி ஈரானை சென்றடைந்துள்ளார்.

இது குறித்து ஈரானிய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில்,

பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் தனது பயணத்தின் போது, ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி உள்ளிட்ட பிற ஈரானிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கான முயற்சிகளில் பாகிஸ்தான் முக்கிய மத்தியஸ்தராக இருந்து வருகிறது.

இதில் நக்வியின் பயணம் குறித்த கூடுதல் எதிர்பார்ப்பு மிக்கது" என தெரிவிக்கப்பட்டுள்ளது (3)

# அமெரிக்கா-ஈரா
# கடுமையான உண

## ஐ.நா அவசர எச்சரி

(வோஷிங்டன்)

**மத்திய கிழக்கில் தீவிரமடைந்துள்ள போ தங்களின் அடிப்படை உணவுத் தேவைகளை முடியாமல் கடுமையான உணவுப் பற்றாக்கு ப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் திட்டம் எச்சரித்துள்ளது.**

உலக உணவுத் திட்டம் வெளியிட்டுள்ள புதிய ஆய்வறிக்கையின்படி, இந்த பிராந்திய மோதலின் நேரடிப் பாதிப்பால் உலகளவில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மூன்று நாடுகளில் உணவுப் பாதுகாப்பு மோசமடைந்துள்ளது.

அதன்படி, சோமாலியாவில் மேலதிகமாக 2.5 மில்லியன் மக்களும், ஆப்கானிஸ்தானில் 2.3 மில்லியன் மக்களும், இலங்கையில் 1.3 மில்லியன் மக்களும் தற்போது கடுமையான உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே உலகம் முழுவதும் 318 மில்லியன் மக்கள் கடுமையான பட்டினியால் வாடி வரும் நிலையில், இந்த புதிய எண்ணிக்கை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து உலக உணவுத் திட்டத்தின் தற்காலிக நிறைவேற்றுப் பணிப்பாளர் கார்ல் ஸ்காவ் ஐக்கிய நாடுகள் சபை செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளதாவது:

"எங்களின் முந்தைய கணிப்பிலேயே நாங்கள் இப்போதும் உறுதியாக இருக்கிறோம். ஏனெனில், உலகின் பெரும்பாலான பகுதிகளில் எரிபொருள் விலைகளுக்கும், உணவுப் பொருட்களின் விலைகளுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு உள்ளது. ஏழை நாடுகளில் உள்ள மக்கள் தங்களின் வருமானத்தின் பெரும்பகுதியை உணவிற்காகவே செலவிடுகின்றனர்.

எனவே, எரிபொருள் விலை உயர்வால் உணவுப் பொருட்களின் விலை அதி

கரிக்கு
உண
கிறார்
அத்



# அமெரிக்காவின் கடுமையான கட்டுப்
# உலக கிண்ணத்தில் பங்கேற்

(டெஹ்ரான்)

உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்பதற்காக அமெரிக்கா செல்லும் ஈரான் கால்பந்து அணியினர், போட்டி நடைபெறும் அதே நாளில் அமெரிக்க மண்ணுக்குள் நுழைந்து, போட்டி முடிந்த சில மணித்தியாலங்களிலேயே அங்கிருந்து வெளியேற வேண்டும் என அமெரிக்கா கடுமையான விசா கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும்



இஸ்ரே
நடவடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ரான் போரினால் டணவு நெருக்கடி

## ச்சரிக்கை

**ள்ள போரால் மக்கள் வகளைப் பூர்த்தி செய்ய ற்றாக்குறைக்கு தள்ள பயின் உலக உணவுத்**

கரிக்கும் போது, அவர்கள் உண்ணும் உணவின் அளவைக் குறைத்துக் கொள் கிறார்கள்." என்றார்.

அத்துடன் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றம் தணிந்தாலும் கூட, இறக்குமதிகளில் அதிகம் தங்கியிருக்கும் ஏழை மற்றும் வளரும் நாடுகளில் இந்த உணவுப் பற்றாக்குறைப் பாதிப்பு எதிர்வரும் மாதங்களில் மேலும் தீவிரமடையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை, சோமாலியா, ஆப்கானிஸ்தான் தவிர சூடான், காசா, தெற்கு லெபனான், ஏமன் மற்றும் ஹைட்டி ஆகிய நாடுகளும் தற்போதைய உலகளாவிய உணவுப் பாதுகாப்பின்மையின் மிக மோசமான பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச நன்கொடையாளர்கள் உடனடியாக நிதியுதவிகளை வழங்க முன்வராவிட்டால், இதன் மனிதப் பேரழிவு மிகக் கொடூரமானதாக இருக்கும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது. (3)



# ட்ரம்பின் குடிவரவுத் தடை சட்டவிரோதமானது
# அமெரிக்க நீதிமன்றம் அதிரடி



(வோஷிங்டன்)

உலக நாடுகளில் இருந்து அமெரிக்காவிற்கு இடம்பெயர முற்படும் 39 நாடுகளைச் சேர்ந்த மக்களின் புகலிடம், பணி அனுமதி, கிரீன் கார்டு மற்றும் குடியுரிமை விண்ணப்பங்களை முடக்கி வைக்கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் கொண்டு வந்த குடியேற்றக் கொள்கை சட்டவிரோதமானது என்று அமெரிக்க பெடரல் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பரில் வோஷிங்டனில் இரண்டு தேசிய பாதுகாப்புப் படை வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த குடியேறி ஒருவர் மீது குற்றம்சாட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்கப் பாதுகாப்பு மற்றும் பின்னணி சரிபார்ப்பைக் காரணம் காட்டி, ஆப்கானிஸ்தான், ஈரான், ஹைட்டி, சோமாலியா, வெனிசுலா, சிரியா உள்ளிட்ட 39 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவிற்குள் நுழைய முழுமையான மற்றும் பகுதி அளவிலான தடைகளை ட்ரம்ப் நிர்வாகம் விதித்தது.

இதனால் சட்டப்பூர்வமாக விண்ணப்பித்த ஆபிரிக்க, ஆசிய, இலத்தீன் அமெரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோரின் விண்ணப்பங்களை அமெரிக்கக் குடியுரிமை மற்றும் குடியேற்றச் சேவை அமைப்பு எவ்வித முடிவும் எடுக்காமல் பல மாதங்களாக நிறுத்தி வைத்திருந்தது.

இதனை எதிர்த்து குடியேற்ற ஆதரவு அமைப்புகளும், தொழிலாளர் சங்கங்களும் ரோட் தீவு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி ஜான் மெக்கானெல், ட்ரம்ப் நிர்வாகத்தின் இந்த நடவடிக்கை பாராளுமன்ற விதிகளுக்கு எதிரானது என்று கூறி அதனை இரத்து செய்தார்.

விண்ணப்பதாரர்கள் எந்தத் தவறும் செய்யாத பட்சத்தில், அவர்கள் பிறந்த நாட்டின் அடிப்படையில் பாகுபாடு காட்டி அவர்களின் வாழ்க்கையை முடக்கி வைக்க அரசுக்கு சட்டப்பூர்வ அதிகாரம் இல்லை என்றும், குடியேற்றத்திற்கு எதிரான உள்நோக்கத்துடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் நீதிபதி தனது தீர்ப்பில் கடுமையாகச் சாடியுள்ளார்.

இந்தத் தீர்ப்பு முறையான வழிகளில் குடியேறக் காத்திருக்கும் பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டினருக்கு கிடைத்துள்ள மிகப்பெரிய வெற்றியாகப் பார்க்கப்படுகிறது. (3)

## கட்டுப்பாடுகளுடன் கேற்கும் ஈரான்

இஸ்ரேல் மேற்கொண்டு வரும் போர் நடவடிக்கை காரணமாக, இரு நாடுகளுக்கும் இடையே கடுமையான பதற்றம் நிலவி வருகிறது.



இதன் காரணமாக, ஈரான் கால்பந்து அணி தனது உலகக் கிண்ணப் பயிற்சிகளுக்காக முதலில் அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் உள்ள டக்சன் நகரைத் தேர்வு செய்திருந்தது.

எனினும், தற்போதைய போர்ச் சூழலால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டு, ஈரான் அணி தற்போது மெக்சிகோவில் முகாமிட்டுள்ளது.

இந்த விசா கட்டுப்பாடுகள் குறித்து மெக்சிகோவிற்கான ஈரானிய [illegible] பசந்திதே செய்தியாளர்களிடம் விவரிக்கையில், "அமெரிக்காவின் விசா கட்டுப்பாடுகளின்படி, ஈரான் அணியினர் போட்டி நடைபெறும் நாள் அன்று காலையில்தான் அமெரிக்காவிற்குள் நுழைய முடியும். அதேபோல் போட்டி முடிந்த அன்றைய தினமே அவர்கள் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும்." என்று அவர் அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளார்.

[illegible] கால்பந்து அணி, உலகக் கிண்ணத் தொடரின் குழு நிலைப் போட்டிகளில் மூன்று போட்டிகளை அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் சியாட்டல் ஆகிய நகரங்களில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மூன்று போட்டிகளின் போதும் ஈரான் அணியினர் இதே கடுமையான விசா விதிமுறைகளையே பின்பற்ற வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பாதாமிப்பழம்/குமழிப்பழம்

(Apricot Fruit)



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஆப்ரிகாட் பழங்கள் உடலுக்கு அதிக சத்து நிறைந்த பழங்களாகும். இப் பழத்தில் உள்ள போசனைக்கூறுகள் உயிர்ச்சத்து A,C,B1, B6,Bc, பொட்டாசியம்,மக்னீசியம், பொஸ்பரஸ்,நாகச்சத்து, ஏகப்பட்ட சத்துக்கள் இக் குட்டிப் பழத்தில் அடங்கியுள்ளது.

அத்துடன் முக்கியமாக நார்ச்சத்தும், பொலிபினோல் சத்துக்களும் மற்றும் ஆன்டி ஒக்சிடன்கள் நிறைந்த ஊட்டச்சத்து மிக்க பழங்களாகும்.நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்தல், செரிமானத்தை மேம்படுத்தல், இதய ஆரோக்கியத்தை காத்தல் மற்றும் இரத்த சோகையை நீக்குதல் போன்ற நன்மைகள் ஆப்ரிகாட் பழங்களை சாப்பிடுவதால் கிடைக்கிறது.

இதில் உயிர்ச்சத்து A மற்றும் C நிறைந் துள்ளதால் சருமத்தை பளபளப்பாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது. நார்ச்சத்து அதிகம் உள்ளதால், மலச்சிக்கல் பிரச்சினை நீங்கி குடல் ஆரோக்கியம் மேம்படும். இரும்புச்சத்து மற்றும் உயிர்ச்சத்து C ஆகியவை இணைந்து செயற்படுவதால் இரத்தச் சோகை வராமல் தடுக்கிறது.

இப் பழங்களில் உள்ள பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்துக்கள் (Dietary fibers) இரத்த அழுத்ததைக் கட்டுக்குள் வைத்து இதய ஆரோக்கியத்தை



மேம்படுத்துகிறது. அத்துடன் இப் பழத்து உயிர்ச்சத்து A மற்றும் E சத்தும் நிறைந்துள்ளதால் கண் பார்வை தெளிவு பெற உதவுகிறது. கர்ப்பிணிப் பெண்களும், பாலூட்டும் தாய்மார்களும் இப் பழங்களை சாப்பிடலாம்.

ஒரு நாளைக்கு 2-3 பழங்கள் சாப்பிடலாம். உயிர்ச்சத்து A நிறைந்த முக்கியமான பழமாகும். ஒரு நாளைக்கு 2 பழங்கள் சாப்பிட்டால் ஒரு நாளைக்குத் தேவையான 8-9 வீதமான உயிர்ச்சத்து A கிடைக்கின்றது.

அத்துடன் உடம்பில் புற்று நோய்க் கலங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி வயதான தோற்றத்தையும் தடுக்கக் கூடியது. முக்கியமாக சில ஆய்வின் முடிவின் படி சதையில் வரும் புற்றுநோய், குடல் புற்றுநோய் வரக்கூடிய தன்மையைத் தடுக்கக் கூடியது.

பெண்களுக்கு ஏற்படும் மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதையும் தடுக்கக்கூடியது. ஆப்ரிகாட் பழங்களை சாப்பிட்டு வரும் போது பித்தப்பையில் கற்கள் உருவாவதைத் தடுக்கக் கூடி யது. அத்துடன் உடலில் கெட்ட கொழுப்புகள் அதிகரிக்க விடாமல் தடுக்கக் கூடியது.

இதனை பாதாமி பழம் எனவும் அழைப்பர். இப் பழங்களை பச்சையாகவும் சாப்பிடலாம். பாதாமி பழத்திலுள்ள இரும்புச் சத்து மற்றும் செம்புச் சத்தானது இரத்தத்தில் ஈமோகுளோபின் அளவை அதிகரிக்க உதவுகிறது. இரத்தத்தில் அதிக அளவு சிவப்பு அணுக்களை உருவாக்க உதவுகிறது. மற்றும் சோர்வு, பலவீனத்தைக் குறைக்கிறது. பாதாமி பழத்திலிலுள்ள பொட்டாசியம், நார்ச்சத்து மற்றும் ஆக்சியனேற்றிகள் உள்ளன.

இவை இதய நோய்களின் தாக்கத்தை தடுப்பதன் மூலம் இதயத்தை ஆரோக்கியமாக வைத்ததிருக்க உதவுகின்றது. பாதாமி பழத்திலிலுள்ள கல்சியம் எலும்புகளை வலுவாக வைத்திருக்க உதவுகிறது. தசைப்பிடிப்புகளையும் நீக்கக் கூடியது. அத்துடன் இப்பழத்திலிலுள்ள பெக்டின் சத்தானது உடலில் உள்ள நீரின் அளவை குறைய விடாமல் காக்கும்.

இது இனிப்பு மற்றும் புளிப்புச் சுவையைக் கொண்ட பழமாகும். இது உடலுக்கு தினசரி தேவையான சத்துக்களில் முக்கியமானது. இப் பழங்களிலுள்ள நார்ச்சத்தானது கரையக்கூடியது. இது குடல் இயக்கத்தை ஆரோக்கியமாக வைக்கச் செய்கிறது.

குடலில் மலத்தை தேக்காமல் வெளியேற்ற செய்கிறது. கெட்ட கொழுப்பை கரைப்பதோடு நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்கச் செய்யும். பழத்திலுள்ள பொட்டாசியம் உள்ளடக்கமானது எலக்ட்ரோலைட் அளவை சமப்படுத்தக் கூடியது. இது இதயத்தசைகளை ஒழுங்காக வைத்திருக்கின்றது.

இப்பழத்தில் ஃப்ளவனாய்டுகள் என்று சொல்லும் பாலிபினால் ஆக்ஸியனேற்றிகளின் குழுவில் உள் ளன. இது நீரிழிவு, இதயநோய்கள் உள்ளிட்ட நோய்களிலிலுருந்து பாதுகாக்க உதவுகிறது.

இப்பழத்தில் முக்கிய பிளவனொயிட்டுகள், குளோரோஜெனின் அமிலங்கள் மற்றும் கேடசின்கள் மற்றும் குர்சிடின் எனும் முக்கிய வேதியற்சத்துக்கள் உள்ளது.

இது ஃப்ரீ ரேடிக்கல்களை நடுநிலையாக்குவதற்கு உதவுகிறது. இவை மன அழுத்தத்தைக் குறைக்கக் கூடிய வல்லமை கொண்டது. சர்க்கரை உயர்த்தும் திறன் குறைவாக உள்ளதால் நீரிழிவு நோயாளிகள் தினம் 2-3 பழங்களைச் சாப்பிடலாம். எமது வடமாகாணப் பிரதேசத்தில் நன்கு வளரக் கூடியது. கொத்துக் கொத்தாக நிறையப் பழங்களை அறுவடை செய்யலாம். பெரும்பாலும் வருடம் முழுவதும் இப் பழங்கள் கிடைக்கும்.

# இராசிபலன்

08.06.2026
வைகாசி 25, திங்கட்கிழமை
அட்டமி முன்னிரவு 10.36 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 5.26 மணிவரை
சுப நேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை

சந்திராஷ்டமம்: மகம்

வளவன்


மேஷம்

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்காகமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.


மிதுனம்

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார், பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.


கடகம்

உதவுவதாக சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், ரோக பயமுண்டு.


சிம்மம்

சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


கன்னி

கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், உடல் நலன் சீராகும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.


துலாம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்பு ண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.


விருச்சிகம்

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாராட்டும் புகழும் கூடும், பயணங்களால் பலனுண்டு, புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்


தனுசு

மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்


மகரம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வாக்கு மேண்மையுண்டு.


கும்பம்

மறக்க முடியாத சம்பவமொன்று இடம் பெறலாம், உடல்நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் கூடும்


மீனம்

பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப் படலாம், தொலைதூரச் செய்திகள் ஆச்சரியம் தரும், வரம் தரும் தெய்வங்களை வழிபடு-வீர்கள், சுப விரயங்கள் கூடும் நாள்

அகந்தையை விட அடக்கத்திற்கு இலாபம் அதிகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# தரிசனம் 02 XX

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

புருசோத்தமன்



(05.06.2026 தொடர்ச்சி)

இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும் என்ற இத்தரிசனத்தை எழுதிக் கொண்டிருக்கும் போது இரண்டு செய்திகளை அறிய முடிந்தது.

அந்த இரண்டு செய்திகளும் சமயம் சார்ந்தவை. அவை பற்றி இங்கு பிரஸ்தாபிப்பது அவசியமாகிறது எனக் கருதுகிறோம்.

ஆம், குறித்த இத்தரிசனத்தை எழுதிக் கொண்டிருக்கும் போது, ஓர் அன்பர் என் தொலைபேசிக்கு அழைப்பெடுத்தார். அவரிடம் இனம்புரியாத பதற்றம் இருந்ததை அவரின் குரல் கூறிநின்றது.

என்ன சங்கதி? என வினவினோம். இன்று (21.05.2026) அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் கொடியேற்றம். அங்கு முரண்பாடுகள் நிலவுகின்றன. சிலவேளைகளில் கொடியேற்றம் தடைப்பட்டுவிடும் நிலைமை உள்ளது. ஒரு கணம் பாருங்கள் என்றார்.

உண்மையில் அந்தச் செய்தி வேதனை தந்தது. ஓர் ஆலயத்தின் கொடியேற்றம் தடைப்படுகின்ற அளவுக்கு எங்கள் ஆலயங்களில் முரண்பாடுகள் உச்சம் பெற்று விட்டனவோ என்பதே அந்தக் கவலைக்கான காரணம்.

இதை என்னுடன் இருந்தவர்களிடம் கூறிய போது, அதில் ஒருவர்; ஏன்? ஒரு முறை வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயக் கொடியேற்றம் நடைபெறாமல் தர்க்கம் நடந்தது.

ஈற்றில் யாழ்ப்பாண நீதிமன்றுக்கு விவகாரம் சென்றதையடுத்து, நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் பேரில் அன்றைய தினம் மாலைப் பொழுதிலேயே கொடியேற்றம் நடத்த வேண்டியதாயிற்று என்றார்.

என்ன செய்வது, ஒரு காலத்தில் மக்களிடையே ஏற்பட்ட பிணக்குகளை எங்கள் சைவ ஆலயங்கள் தீர்த்து வைத்தன.

ஆலயத்தில் கற்பூரம் அணைத்துச் சத்தியம் செய்வதனூடு பிணக்குகள் தீர்க்கப்பட்டன.

இன்று உலகம் முழுமையிலும் இருக்கக்கூடிய நீதிமன்றங்களில் 'நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறில்லை..' எனச்சத்தியம் செய்கின்ற மரபு சைவ ஆலயங்களில் கற்பூரம் அணைத்துச் சத்தியம் செய்கின்ற எங்கள் சைவ நீதி, உலக நீதியாக மலர்ந்ததன் வெளிப்பாடாகும்.

ஆனால் இன்று அதே சைவாலயங்களை நீதிமன்றங்களில் நிறுத்திய எங்களை அந்த இறைவன் எங்ஙனம் மன்னிப்பான் என்பதோடு இந்த விடயத்தைப் பின்னர் தரிசிக்கலாம்.

இங்கு நாம் கூறிய இரண்டாவது விடயம் 'பாதபூசை' பற்றியதாகும்.

ஆம், கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்கள் தமிழகத்திலுள்ள திருச்செங்கோடு என்ற இடத்தில் நடக்கும் கம்பன் விழாவில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்ற போது, அவருக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கூடவே அவருக்குப் பாதபூசை செய்து அவரை வரவேற்றார்கள்.

இப்போது கம்பவாரிதிக்கு நடந்த பாத பூசை தொடர்பில் ஒரு சில சமூக வலைத்தளங்களில் மிக மோசமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதாக அறிந்து மிகுந்த வேதனை அடைந்தோம்.

பொதுவில், பாத பூசை என்பது நம் சைவப் பண்பாட்டு மரபில் இருக்கக்கூடிய ஒன்றே.

அத்தகைய பண்பாட்டு மரபுகள் நம்மிடையே உச்சம் பெறாவிடினும் தமிழகத்தில் அந்த நடைமுறை இன்னமும் உயிர்ப்போடு உள்ளது.

இங்கு பாதபூசை என்பது யாருக்குச் செய்யப்படுகிறதோ அவர் தொடர்பில் அந்த மக்கள் உயர்ந்த மதிப்பும் மரியாதையும் பக்தியும் கொண்டுள்ளனர் என்பது தான் பாதபூசையின் வெளிப்பாடு.

இங்கு சில சம்பிரதாயங்களை நாம் விரும்பாவிடினும் மற்றவர்களுடைய மனம் நொந்து விடக்கூடாது என்ற காரணத்திற்காக அதனை ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலைகள் உண்டு என்பதையும் உணர்ந்தாக வேண்டும்.

ஆம், கடவுள் மறுப்புக் கொள்கையையுடைய ஈ.வே.ரா.பெரியார் அவர்களின் வீட்டில் ஒருமுறை ராஜாஜி அவர்கள் தங்கினார்.

வைகறைப் பொழுதில் ராஜாஜி நீராடி விட்டு வரும் போது, ஈ.வே.ரா.பெரியார் திருநீற்றுத் தட்டை ஏந்திய வண்ணம் காத்திருந்து அவரிடம் கொடுத்தார்.

இதனை அறிந்த பத்திரிகையாளர்கள் ஈ.வே.ராவிடம் ஐயா! நாஸ்திகமும் கடவுள் மறுப்புக் கொள்கையும் கொண்ட தாங்கள் திருநீற்றை ஏந்திய வண்ணம் காத்திருந்து அதனை ராஜாஜியிடம் கொடுத்தீர்களே! இது தகுமா? எனக் கேட்டார்கள்.

அதற்கு ஈ.வே.ரா பெரியார்; ராஜாஜி சைவநெறியைப் பின்பற்றுபவர். எனவே என்னுடைய கொள்கை அவருடைய வழமையான சந்தியாவந்தனத்தை பாதித்து விடக்கூடாது. எனவே அவரின் மரபை ஏற்றுக்கொள்வது தான் மனிதப் பண்பு என்றார்.

ஆம், கம்பவாரிதி அவர்கள் பாதபூசையை விரும்பக் கூடிய வரன்று.

ஆனால் அந்த இடத்து மக்களின் வழமையை-அவர்களின் ஏற்பாட்டை-அந்தப் பணியைச் செய்வதற்கெனப் பொறுப்பெடுத்தவர்களின் வகிபங்கைத் தவிர்த்து-நிராகரித்து அவர்களுக்கு மனச்சஞ்சலத்தை ஏற்படுத்துமாறு கம்பவாரிதி அவர்கள் ஒருபோதும் நடந்து கொள்ள மாட்டார் என்பதில் இருவேறு கருத்திருக்க முடியாது.

இங்கு தான் ஒரு விடயத்தை நாம் சொல்லியாக வேண்டும். அதாவது விமர்சனங்கள் தேவையானவை. கருத்துக்களை முன்வைக்கும் சுதந்திரம் அனைவருக்கும் உண்டு. அதை தடுப்பது ஏற்புடையதன்று. ஆயினும் அந்த விமர்சனங்கள் பண்பாடானதாக-மற்றவர்களும் அதனைப் பார்த்து, அதில் இருக்கக்கூடிய நியாயத்துவங்களை ஆராய்வதாக இருத்தல் மிகமிக அவசியம்.

### இலக்கியப் பேராற்றல் கொண்டவர் கம்பவாரிதி

தமிழகத்தின் திருச்செங்கோட்டில் கம்பவாரிதிக்குப் பாதபூசை செய்தார்கள் என்றால் அது கம்பவாரிதிக்கல்ல. மாறாக அவரிடம் இருக்கக்கூடிய இலக்கியப் பேராற்றலுக்கான அங்கீகாரம் என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

ஆம், எங்கள் ஈழத்திருநாட்டின் தமிழ் மகன் ஒருவருக்கு எட்டு கோடி மக்களைக் கொண்ட தமிழகம் பாதபூசை செய்கிறது என்றால், அது கண்டு நாம் பெருமையடைய வேண்டாமோ.

உண்மை. தமிழகத்தில் எத்தனையோ பேச்சாளப் பெருமக்கள் இருப்பினும் அவர்கள் அத்தனை பேரையும் கடந்து, எங்கள் ஈழத்து மண்ணில் வாழ்கின்ற கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் தமிழகத்தில் போற்றப்படுகிறார் எனும் போது அது கண்டு நாம் இறுமாப்பு எய்தாமல் இருக்க முடியாது.

உண்மை. எதிரியாக இருப்பினும் என் ஈழத்தமிழன்-என் இரத்த உறவு, உலகின் எந்த மூலையில் சாதனை படைத்தாலும்-உலகில் எங்கு அவருக்கு மதிப்புக் கிடைத்தாலும் அவர் இருக்கும் திசை நோக்கி நான் நிச்சயம் வணங்குவேன்.

எங்களுக்குள் ஆயிரம் கருத்து வேறுபாடுகள்-கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் என் இனத்தவராக-என் தேசத்தவராக-என் ஊரவராக ஒருவர் சாதனை படைப்பாராக இருந்தால், அந்தச் சாதனை மக்களால் அங்கீகரிக்கப்படுமாக இருந்தால், அதற்கு உயர் மதிப்பும் மரியாதையும் கிடைக்குமாக இருந்தால், அதனை உரிமை கோரி என்னவனுக்குக் கிடைத்த உயரிய மரியாதை என் தாயகத்திற்குக் கிடைத்த உயரிய மரியாதை என நிச்சயம் நாம் புளகாங்கிதமடைய வேண்டும்.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1059





பழுவேட்டரையர் ஜோதிடர் வீட்டு வாசலில் பிரவேசித்த போது, முன்னொரு தடவை நாம் பார்த்திருக்கும் அதே காவல்காரன், ஜோதிடரின் சீடன் அவரைத் தடுத்து நிறுத்தினான். பழுவேட்டரையர் அப்போதிருந்த கோலத்தில் அவரை அவனால் அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை. ஆகையினாலேயே "நில்!" என்று அதட்டும் குரலில் கூறிவிட்டுத் தடுத்தான். பழுவேட்டரையர் ஒருமுறை /ஹங்காரம் செய்துவிட்டு அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளினார். சீடன் குட்டிக்கரணம் அடித்துக் கொண்டு போய் வீதியில் விழுந்தான். பழுவேட்டரையர் மதயானையைப் போல் பூமி அதிர நடந்து ஜோதிடரின் வீட்டுக்குள் புகுந்தார்.

### அத்தியாயம் 13 - குந்தவை கேட்ட வரம்

ஜோதிடரின் வீட்டுக்குள் பழுவேட்டரையர் பிரவேசித்த போது அங்கு உண்மையாகவே குந்தவைப் பிராட்டியும், வானதியும் இருந்தார்கள். ஈழத்து ராணியைப் பொழுது விடிந்ததும் காணாததிலிருந்து குந்தவையின் மனம் அமைதியை இழந்துவிட்டது.

அதே சமயத்தில் பூங்குழலியும் காணாமற் போனது அவளுடைய கலக்கத்தை அதிகமாக்கிற்று. முதன் மந்திரி அநிருத்தரைப் பார்க்கச் சென்றாள். அச்சமயத்தில் அங்கே அருள்மொழிச் சோழனைப் பற்றிச் செய்தி வந்திருந்தது. நாகைப்பட்டினத்தில் அடித்த புயலின் காரணமாக அவன் வெளிப்பட நேர்ந்ததென்றும் திரளான மக்கள் கூடி அவனை வெற்றி முழக்கத்துடன் தஞ்சைக்கு அழைத்து வருகிறார்கள் என்றும் அறிந்தாள். குந்தவையின் பரபரப்பு எல்லையைக் கடந்துவிட்டது.

இதனால் ஏதோ விபரீதம் வரப்போகிறது என்று கருதினாள். பொன்னியின் செல்வனை வழியில் சந்தித்துப் பேசித் தஞ்சையில் நடந்ததையெல்லாம் தெரிவிக்க வேண்டும் என்று விரும்பினாள். அவன் பெரும் ஜனக் கூட்டம் புடை சூழத் தஞ்சைக் கோட்டையில் பிரவேசிக்க விரும்பினால், பழுவேட்டரையரின் படைவீரர்கள் அவனைத் தடுத்து நிறுத்த முயலுவார்கள்.

இதற்கிடையில் பூதி விக்கிரம கேசரி தென் பிரதேசத்துப் படைகளுடனே கொடும்பாளூர் வரைக்கும் வந்து விட்டார் என்று தெரிய வந்திருந்தது. இரண்டு படைகளும் தஞ்சைக்கருகில் மோதிக் கொள்ளும்படி நேரிடலாம்.

அதனால் தந்தையின் உள்ளம் புண்படும் என்பது நிச்சயம். அதனால் அவருடைய உயிருக்கே அபாயம் நேர்ந்து விடலாம்.

மேலும் என்னென்ன விளையுமோ, யாருக்குத் தெரியும்? புயற்காற்றின் காரணமாகக் குடிமக்களின் உள்ளங்கள் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றன. ஏதாவது ஒரு வியாஜம் ஏற்பட வேண்டியதுதான் சோழ நாடே அழியும்படியான பெரும் உள் நாட்டுக் கலகம் மூண்டு விடக் கூடும்.

பிறகு அதை நிறுத்துவது எப்படி? வந்த பின்னர் நிறுத்த முயலுவதைக் காட்டிலும், முன்னாலேயே தடுக்கப் பார்ப்பது அவசியம் அல்லவா? இல்லாவிடில் இத்தனை காலமும் செய்த முயற்சியெல்லாம் வீணாகிவிடுமே? ஆதலின் அருள்மொழிச் சோழனை வழியிலேயே சந்தித்துப் பழையாறையில் சிறிது காலத்துக்கு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஆலமரமும் வெளவால்களும்



(06.06.2026 தொடர்ச்சி)

"வெளவால்களுக்கு மட்டுமா வேட்டுச் சத்தம் ஆகாது! எல்லாப் பறவைகளுக்கும் தான்! ஏன் உனக்குக் கூடத்தான் ஆகாது!" என்றார் அவர்!

"நான் என் பொந்தை அடைச்சுக்குறேன்! காதை இறுக்கமாக பொத்திக்கொள்கிறேன்! இந்த வெடி போடுற விடயம் உங்களுக்கும் எனக்கும் மட்டுந்தான தெரியும்!" என்றது ஆந்தை.

விவசாயி சிரித்தார். அவர் பேச ஆரம்பித்தார்.

"இன்றைக்கு இந்த மரம் ஒரு பெரிய விருட்சமாக வளர்ந்து நிக்குதுனா அதுக்கு இதுல அடையுற வெளவால்கள் பறவைகள் மற்ற சிற்றுயிர்களோட எச்சம்தான் காரணம்! அந்த எச்சங்கள் தான் மக்கும் உரமாக மாறி இந்த மரத்தோட வளர்ச்சிக்கு உதவியிருக்கு! அதுக்கு நன்றிக் கடனாத்தான் மரம் உங்களுக்குப் பழங்களைத் தருகிறது!

இதோட நிக்கவில்லை! நீங்க இந்தப் பழங்களைச் சாப்பிட்டு அதோட விதைகளை எங்கயாவது வீசிட்டுப் போய்விடுகிறீர்கள்! யார் கண்டது? பக்கத்தில் எங்கயாவது வளர்ந்து இருக்குற ஒரு ஆலமரத்தோட வித்து நீங்க வீசுன இந்த மரத்தோட வித்தாக் கூட இருக்கலாம்! நான் விவசாயி! நான் உற்பத்தி செய்யுற தானியங்களுக்குப் பெருத்த சேதாரத்தை உண்டு பண்ணுற எலிகளோட பெருக்கத்த நீதான் கட்டுப்படுத்துற! அதனால் நீ விவசாயிகளோட நண்பன்! உணவுச்சங்கிலியில் ஒவ்வொரு உயிர்களும் இப்படித் தான் ஒண்ணை ஒண்ணு சார்ந்து இருக்குற மாதிரி இயற்கையாக அமைஞ்சிருக்கு! இயற்கையோட இயைந்து வாழணும்!

யாரையும் வெறுக்கக் கூடாது! நீ ஒரு இரவாடி! இன்னோரு இரவாடியோட உன்னோட இருப்பிடத்தைப் பகிர்ந்துகொள்வதில் உனக்கு என்ன சிரமம்? முதல்ல இந்த மரத்துக்கே நாம்தான் ராஜாங்குற நினைப்பை விடு!" என்றார் விவசாயி.

ஆந்தை யோசித்தது. அது தனது தவறை உணர்ந்தபடி மௌனமாக அங்கிருந்து நகர்ந்து சென்றது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உழைப்பாளன் வருத்தம் அடைந்தால்
உலகம் அழிந்து விடும்.
– திருவள்ளுவர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# பொலிஸார் தொடர்பில் யாருக்கும் பயம் இல்லை

பயம் – பக்தி இஃதிரண்டும் சேர்ந்து பயபக்தியாயிற்று. பயபக்தி என்பது மிகவும் முக்கியமானது. தனித்து பயமோ அன்றி தனித்து பக்தியோ மீட்சியைத் தரமாட்டா.

ஆம், கடவுள் மீது பயபக்தி இருக்க வேண்டும். கடவுளிடம் பக்தியை மட்டுமே நாம் கொண்டிருப்போமாயின், அஃது செருக்காக மாறும். திருவிளையாடல் படத்தில் வருகின்ற ஹேமநாத பாகவதரிடம் பக்தி இருந்தது. பயம் இருக்கவில்லை. அதனால் அவர் தலைக்கணம் கொண்டார்.

இதுபோலவே எங்கும் எதிலும் பயபக்தி இருக்க வேண்டும். இங்கு கடவுளிடம் பக்தியாக வெளிப்படும் சொற்பிரயோகம் மனிதச் சமூகக் கட்டமைப்பில் மதிப்பு மரியாதை என்றாகிறது.

ஆம், பாடசாலை அதிபர் ஆசிரியர்களிடம் மாணவர்களுக்கு பயமும் அதேநேரம் அவர்கள் மீது மரியாதையும் இருக்க வேண்டும். இதுபோலவே அனைத்து இடங்களிலும் பயமும் மரியாதையும் கலந்த உணர்வு இருக்கும் போது தான் அங்கு நேர்மையும் நேர்த்தியுமான பணிகள் நடந்தாகும்.

அந்தவகையில் அனைத்து பொதுமக்களும் சட்ட திட்டங்களை அனுசரித்து நடக்கின்ற பொதுமைக்கு ஆட்பட்டவர்கள். சில வேளைகளில் அதிலிருந்து யாரேனும் விலகுவார்களாயின், அவர்களை நெறிப்படுத்த – வழிப்படுத்த சட்டம் முன்னிற்கும்.

அதாவது சட்டங்களை பக்கசார்பின்றி முறையாக நடைமுறைப்படுத்தப்படும் போது பொதுமக்கள் அதனூடு அமைதியான –சுமூகமான – அச்சமற்ற வாழ்க்கையை வாழ முடியும்.

மாறாக, மக்கள் சமூகத்தில் குழப்பங்களும் வன்முறைகளும் சண்டை சச்சரவுகளும் கொலை கொள்ளைகளும் விபத்துக்களும் மலிந்து போகுமாயின், அதற்கான மூல காரணம் அங்கு சட்டம் ஒழுங்காக கடைப்பிடிக்கப்படவில்லை என்பதேயாம்.

இதை நாம் கூறும்போது, பொதுமக்கள் சட்டத்தைப் பின்பற்றுவதும் அதை மீறுவதுமான காரியம் சட்டத்தை அமுல்படுத்துகின்ற தரப்பின் கைகளில் உள்ளன.

ஆம், சட்டம் அமுலாகுவதைக் கண்காணிக்கின்ற பொலிஸ் திணைக்களம் மிகவும் விழிப்பாகவும் சிறப்பாகவும் நேர்மையாகவும் இயங்க வேண்டும்.

உன்னதமான பொலிஸ் சேவை இனமத பேதமின்றி இலஞ்ச ஊழல் யாதுமின்றி சீராக நடந்தாகுமாயின், அந்த மக்கள் சமூகம் நிச்சயம் சட்ட திட்டங்களில் விருப்புக் கொண்டு அதை அனுசரிக்கும். ஆனால் எங்கள் நாட்டில் அதிலும் குறிப்பாக எங்கள் தமிழர் தாயகத்தில் பொலிஸ் சேவை என்பது மாசுபட்டு விட்டது.

ஊழலும் இலஞ்சமும் பொலிஸ் சேவையைப் பங்கப்படுத்தி விட, பொலிஸார் குறித்து யாரும் அச்சம் கொள்வதாகவோ, பொலிஸாருக்கு மரியாதை கொடுப்பதாகவோ இல்லாமல் போயிற்று.

இந்த மிக அபத்தமான நிலையிலேயே எங்கள் மண்ணில் விபத்து மரணங்களும் களவுகளும் கொலைகளும் சட்டவிரோத செயல்களும் சர்வசாதாரணமாக நடந்தாகின்றன.

எனவே மேற்குறித்த சமூக விரோத செயல்கள் ஒழிந்து மக்கள் நிம்மதியாக வாழ்வதாயின், அதற்கான ஒரே வழி எங்கள் பொலிஸ் சேவையை பரிசுத்தமாக்க வேண்டும்.

# அனைத்துப் பிள்ளைகளுக்கும் சம தரத்திலான கல்வி முறை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிப் பொறுப்புக் கூறலுடன் அனைத்துப்பிள்ளைகளும்கல்வியின் தரத்தை சமமாக அனுபவிக்கக்கூடிய ஜனநாயகக் கல்வி முறையொன்றை ஏற்படுத்த அரசாங்கம் முன்னிற்கும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையின் மனித வள முகாமைத்துவ மொடியுலின் முதலாம் கட்டம் மற்றும் 'ஈ-தக்சலாவ' கற்றல் முகாமைத்துவ முறைமையின் முன்னோடித் திட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிப் பொறுப்புக்கூற வேண்டியது அரசாங்கம் என்ற வகையில், அனைத்துப் பிள்ளைகளும் கல்வியின் தரத்தை சமமாக அனுபவிக்கக் கூடிய ஜனநாயகக் கல்வி முறையொன்றை ஏற்படுத்த வேண்டும்.

அதற்காகச் சரியான தரவுகள், கொள்கைகள் மற்றும் தொழில்நுட்பக் காரணிகளின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

எமது அரசாங்கத்தைப் பொறுத்தவரை டிஜிட்டல் மயமாக்கல் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். மாறிவரும் உலகிற்கு ஏற்ப நாமும் மாறி முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

அத்துடன் அரச சேவைகளை மிகவும் வினைத்திறனாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் மக்களுக்கு வழங்க டிஜிட்டல் மயமாக்கல் அவசியம் என நாம் நம்புகிறோம் என்றார். (ந-7)

### என் கணவர் இன்னலுறுகிறார்

# பொலிஸ் மா அதிபருக்கு சுரேஷ் சலே மனைவி கடிதம்

தடுப்புக்காவலில்வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் தலைவர் சுரேஷ் சலே மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகக் கூறி, அவரது மனைவி மனோரி சலே பொலிஸ் மா அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் சுரேஷ் சலே எதிர்கொள்ளும் சித்திரவதை, அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் மருத்துவ சிகிச்சை மறுக்கப்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்துமாறு அவர் கோரியுள்ளார்.

தாம் எதிர்கொள்ளும் அநீதிகளுக்கு எதிராக சுரேஷ் சலே சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளமையை சுட்டிக்காட்டியுள்ள அவர் (மனைவி) சுரேஷ் சலே எதிர்கொள்ளும் அநீதிகள் குறித்து கடந்த மார்ச் மாதம் முறைப்பாடு செய்திருந்த போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-7)

### அரச ஊழியர்கள் தொடர்ச்சியாக

# வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளத் தடை

(கொழும்பு)

அத்தியாவசிய தேவைகள் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்கள் ஏதுமின்றி அரச ஊழியர்கள் தொடர்ச்சியாக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதைக் கட்டுப்படுத்தும் வகையில் புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் சிங்கள நாளிதழ் ஒன்றில் வெளியான செய்தியில்,

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளரினால் அனைத்து அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இது தொடர்பான உத்தியோகபூர்வ சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

அதில் மிகவும் அத்தியாவசியமான தேவைகள் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களுக்காக மட்டுமே வெளிநாட்டுப் பயணங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

ஒரே காலப்பகுதியில் தொடர்ச்சியான வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச ஊழியர்களால் அடிக்கடி மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுப் பயணங்களால் ஏற்படும் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சு தரப்பிலிருந்து இதுவரை இது குறித்த உத்தியோகபூர்வ தரவுகள் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-7)

# போலி ஆவணத் தயாரிப்பு மூவர் சி.ஐ.டி யால் கைது

(கொழும்பு)

போலி நில ஆவணங்கள், தேசிய அடையாள அட்டைகள் மற்றும் போலி உத்தியோகபூர்வ முத்திரைகள் தயாரித்து பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் மூவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரளையிலுள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் போலி ஆவணங்கள், போலி தேசிய அடையாள அட்டைகள், சுமார் 600 போலி உத்தியோகபூர்வ முத்திரைகள், மின்னணு உபகரணங்கள் மற்றும் ரூ.15 இலட்சம் பணம் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் பொரளை, திக்வெல்ல மற்றும் ஹொரணைப் பகுதிகளைச் சேர்ந்த 54, 55 மற்றும் 59 வயதுடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

### பாணலிங்கேஸ்வரத்தில்

# "திருமுறை நெறிச்செல்வர்" பட்டக்கற்கை நாளை ஆரம்பம்

(துணுக்காய்)

மாந்தை கிழக்கு விநாயகபுரம் அருள்மிகு நர்மதா நதீஸ்வரர் சிவன் கோவில் (பாணலிங்கேஸ்வரம்) ஆலயத்தில் திருவாடுதுறை ஆதீனத்தால் நடத்தப்படவுள்ள "திருமுறை நெறிச்செல்வர்" பட்டக்கற்கையின் ஆரம்ப விழா நாளை (9) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இவ் ஆரம்ப நிகழ்வில் ஸ்ரீமத் திருச்சிற்றம்பலத் தம்பிரான் சுவாமிகள் பங்கேற்று அருளுரை ஆற்றவுள்ளார். (ந-7)

# போதைவஸ்துடன் நடந்த விருந்து

## 28 பேர் அதிரடிக் கைது

அம்பலாங்கொடை, போனதுவபகுதியில்இடம்பெற்ற விருந்து ஒன்றில் நடத்தப்பட்ட சோதனையில் 28 பேர் போதைவஸ்துக்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 25 ஆண்களும் 3 பெண்களும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பலாங்கொடை பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து மேற்கொண்ட சோதனையின் போதே குறித்த நபர்கள் போதைப் பொருட்களுடன் கைதாகியுள்ளனர்.

இவர்களிடமிருந்து 225 மில்லிகிராம் கொக்கைன், 8 கிராம் 125 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், 2 கிராம் 400 மில்லிகிராம் கஞ்சா மற்றும் சட்டவிரோத சிகரெட்டுக்களும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 26.05.2026 முதல் 13.06.2027 வரை

## குருவின் பார்வையால் கூடுதல் வரவு



**மனக் கணக்கில் மாமேதைகளான மீன இராசி நேயர்களே!**

உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், 26.5.2026 அன்று 5ஆம் இடத்திற்கு வருகிறார்.பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வரும் குரு பகவான் உச்சம் பெற்று உங்கள் இராசியைப் பார்ப்பதால், இது ஒரு அற்புதமான நேரமாகும். பூர்வ புண்ணியத்தின் பலனாக என்னென்னவெல்லாம் கிடைக்க வேண்டுமோ, அவை அனைத்தும் உங்களுக்கு இப்பொழுது கிடைக்கும்.

### குரு இருக்கும் இடத்தின் பலன்

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 10ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு பகவான், 5ஆம் இடத்திற்கு வந்ததும் உச்சம் பெற்று உங்கள் இராசியைப் பார்க்கப்போகிறார். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குரு வருவதால், வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வீடு வாங்குவது அல்லது கட்டுவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்.பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்.

### வெற்றி தரும் குரு பார்வை

சுப கிரகமான குரு பகவான் உங்களின் இராசிநாதன் ஆவார். அவர் இந்த குருப்பெயர்ச்சிக்குப் பின், உங்கள் இராசியை பார்ப்பதோடு, 9, 11 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகிறார். உங்கள் இராசியை பார்க்கும் குருவால் நல்ல சம்பவங்கள் பலவும் நடைபெறும். உடல் ஆரோக்கியம் சீராகும். மருத்துவ செலவு குறையும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும். கைநழுவிச் சென்ற வாய்ப்புகள் இப்போது கைகூடி வரும்.

குருவின் பார்வை 9ஆம் இடத்தில் பதிவதால் பொன், பொருள் வாங்கும் யோகம் உண்டு. பொருளாதாரத்தில் உச்சம் அடைவீர்கள். சொத்துப் பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் தொல்லை கொடுத்து வந்த மேலதிகாரிகள் மாற்றப்படுவர். வேகத்தோடும், விவேகத்தோடும் செயற்படுவீர்கள். தந்தை உறவில் இருந்த விரிசல் அகலும். முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்கும்.

11ஆம் இடத்தை குரு பகவான் பார்ப்பதால், தொழிலில் இலாபம் கிடைக்கும். வியாபாரப் போட்டிகள் அகலும், பிரபலமானவர்கள் உங்களின் வாடிக்கையாளர்களாக மாறி உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவர். மனப்பயம் அகலும். நண்பர்கள் நல்ல தகவல்களை கொண்டு வந்து சேர்ப்பர். புதிய தொழில் தொடங்கும் திட்டம் நிறைவேறும். வங்கி மற்றும் வள்ளல்களின் ஒத்துழைப்பால் தொழிலுக்கான மூலதனம் வந்து சேரும்.வீட்டிற்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

### நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்

26.5.2026 முதல் 10.6.2026 வரை புனர்பூச நட்சத்திரக் காலில் தன் சுயசாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் போது, எதிர்பார்த்த பலன்கள் எளிதில் கிடைக்கும். இது ஒரு அற்புதமான நேரம் ஆகும். புதிய திருப்பங்கள் பலவும் வரப்போகிறது. செல்வ நிலை உயரும். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடு அகலும். வேலைப்பளுவின் காரணமாக உத்தியோகத்தில் இருந்து விடுபட்டு, சுய தொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள். குடும்ப ஒற்றுமை பலப்படும். தொழிலில் புதிய பங்குதாரர்களை சேர்த்துக்கொள்ள முன்வருவீர்கள். எதிரிகளின் பலம் குறையும். பெற்றோரின் உடல்நலத்தில் கவனம் தேவை.

11.6.2026 முதல் 10.8.2026 வரை பூசம் நட்சத்திரக் காலில் சனி சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் போது, இலாபம் சிறப்பாக இருந்தாலும் விரயம் கூடும். வீடு மாற்றம், இடமாற்றம் வருவதற்கான வாய்ப்பு உண்டு. வரும் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக அமையும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்கும் வாய்ப்பு உண்டு. தொழிலை இடமாற்றம் செய்ய நினைப்பவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகள் சில நுணுக்கங்களை கற்றுக்கொடுப்பர். புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும். வாங்கிய சொத்தை விற்றுவிட்டோம் என்று கவலைப்பட்டவர்களுக்கு மீண்டும் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.

11.8.2026 முதல் 19.10.2026 வரை மற்றும் 13.2.2027 முதல் 12.6.2027 வரை ஆயில்யம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும்போது, குடும்பத்தில் மங்கல ஓசை கேட்க வழிபிறக்கும். வாடகை கட்டிடத்தில் நடைபெற்ற தொழிலை, சொந்த கட்டிடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். ஊர் மாற்றம், வீடு மாற்றம் கைகூடும். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். தாய் வழி ஆதரவு உண்டு. தொழில் வளர்ச்சிக்கு கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

20.10.2026 முதல் 12.2.2027 வரை மகம் நட்சத்திரக்காலில் குருபகவான் கேது சாரத்தில் சஞ்சரிக்கும்போது, தொட்டது துலங்கும். சிம்ம குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே தொழில் முன்னேற்றம் ஏற்படும். வெற்றிக்குரிய தகவல்கள் வந்துகொண்டே இருக்கும். கொடுக்கல் - வாங்கல் சரளமாக இருக்கும்.




பணிபுரியும் இடத்தில் நீங்கள் கேட்ட சலுகைகளை உயரதிகாரிகள் வழங்குவர். புனிதப் பயணம் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பார்கள். ஆடை,ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு புது முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

### ராகு - கேது பெயர்ச்சிக் காலம்

13.11.2026 அன்று ராகு கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. இலாப ஸ்தானத்தில் ராகுவும், பஞ்சம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதன் விளைவாக வியாபாரம் வெற்றி நடை போடும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். பணப்பொறுப்பு சொல்லி வாங்கி கொடுத்த தொகை வந்து சேரும். உடன் பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். பஞ்சம ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் பிள்ளைகளின் வழியில் சில பிரச்சினைகள் வரலாம். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய திருப்பங்கள் உருவாகும்.

### செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு

வியாழக்கிழமை தோறும் குரு கவசம் பாடி குரு பகவானை வழிபடுவது நல்லது. யோக பலம் பெற்ற நாளில் காரைக்குடி அருகில் உள்ள மாத்தூர் ஐநூற்றீஸ்வரர்-பெரியநாயகி அம்மன் கோவில் சென்று வழிபட்டால் செல்வ நிலை உயரும்.

### குருவின் வக்கிர காலம்

கடகம் மற்றும் சிம்மம் ஆகிய இராசிகளில் குரு பகவான் வக்ரம் பெறும் போது, குடும்ப சுமை கூடும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலாது. வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படும். வருமானப் பற்றாக்குறை உண்டு. அடிக்கடி உடல்நலக் கோளாறு ஏற்படும். எதிரிகளின் பலம் கூடும் நேரம் இது. எனவே தைரியமும், தன்னம்பிக்கையும் மிகமிக அவசியம். எதைச் செய்தாலும் பலமுறை யோசித்து செய்யுங்கள். உங்கள் இராசிநாதனாகவும் குரு இருப்பதால், குடும்பத்தில் சச்சரவு அதிகரிக்கும். பிறருக்கு நன்மை என்று சொல்லி நீங்கள் செய்த காரியம் தீமையாகத் தெரியும்.

### பெண்களுக்கான பலன்கள்

குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் குடும்ப ஒற்றுமை பலப்படும்.கொடுக்கல் - வாங்கல் திருப்தி தரும். ஆரோக்கியம் சீராகும். மங்கல ஓசை மனையில் ஒலிக்க வழி பிறக்கும். தங்கு தடைகள் தானாக விலகும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்ல முடிவுக்கு வரும். தாய்வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். வருமானம் திருப்தி தரும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த இலாகா மாற்றம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## கடலுக்கு...

களில் மறுஅறிவித்தல் வரும்வரை கடற்பயணங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அத்திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

காங்கேசன்துறை முதல் மன்னார் ஊடாக கற்பிட்டி வரையான கடலோரத்திற்கு அப்பாலுள்ள கடற்பகுதிகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணிக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்பதால் அவ்வேளைகளில் இக்கடல் பகுதிகள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும்.

இதன் காரணமாக இந்தக் கடல் எல்லைகளுக்குள் மறுஅறிவித்தல் வரும் வரை செல்ல வேண்டாம் என கடற்படை மற்றும் மீனவ சமூகங்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் திருகோணமலை முதல் முல்லைத்தீவு ஊடாக காங்கேசன்துறை வரையான மற்றும் கற்பிட்டி முதல் கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடலோரத்திற்கு அப்பாலுள்ள கடற்பகுதிகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணிக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்பதால், அந்தக் கடற்பகுதிகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும் மன்னார் முதல் கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடலோரத்திற்கு அப்பாலுள்ள கடற்பகுதிகளில் கடல் அலைகள் சுமார் 2.0 முதல் 2.5 மீற்றர் வரை உயர்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (ந-7)

## கூட்டங்களில்...

அமைச்சகங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் அரசியல் தலைமைகள் மூலம் நேரடி அல்லது இணைய வழியாகக் கூட்டங்கள் நடத்தப்படுவதால், பிரதேச செயலகங்களின் அன்றாடப் பணிகளுக்கும் அங்கு வரும் பொதுமக்க்ளுக்கும் ஏற்படும் அசௌகரியங்களைக் கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 27/2023 இன் படி, பொதுமக்கள் தினமாக அறிவிக்கப்பட்டுள்ள நாளில் தங்களைச் சந்திக்க வரும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அதிகாரிகள் தங்களது அலுவலகங்களில் தங்கியிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் அந்நாளில் எந்தவொரு உத்தியோகபூர்வக் கூட்டங்களையும் நடத்தக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, இந்த அனைத்துக் காரணிகளையும் கருத்திற்கொண்டு இன்று திங்கட்கிழமை முதல் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடிவு செய்துள்ளதாக பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.செந்தில் தெரிவித்துள்ளார். (ந-7)

## தனியார் பேருந்து...

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

நட்டத்துடன் பேருந்துகளை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், கால அட்டவணைகளை மாற்றி சேவைகளை மட்டுப்படுத்த முடிவு செய்துள்ளோம்.

மேலும், வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தம் தொடர்பில் இதுவரை அரசாங்கத்திடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இந்நிலைமை தொடர்ந்தால் பேருந்துக் கட்டணங்கள் 20% முதல் 25% வரை அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ந-7)

## அச்சுவேலி...

அச்சுவேலி வளலாய்ப் பகுதியில் உள்ள பற்றைக் காடொன்றுக்குள் இருந்து 230 கிலோ கேரள கஞ்சா பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அச்சுவேலி வளலாய்ப் பகுதியில் உள்ள பற்றைக் காட்டுக்குள் சந்தேகத்துக்கிடமான முறையில் சிலர் வாகனத்தில் வந்து செல்வதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு இரகசியத் தகவலொன்று கிடைக்கப் பெற்றுள்ளது.

கிடைக்கப் பெற்ற தகவலுக்கிணங்க அதிரடிப் படையினர் அப்பகுதிக்கு விரைந்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரைக் கண்ணுற்றதும் குறித்த கும்பல் தமது வாகனத்தில் தப்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து விசேட அதிரடிப் படையினர் அப்பகுதியில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 230 கிலோகிராம் கேரள கஞ்சாவை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சாவை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக அச்சுவேலி பொலிஸாரிடம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் பாரப்படுத்தியுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7,33)

## 300ஐ...

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வின் மூன்றாம் கட்டத்தின் 18ஆம்நாள் அகழ்வுப் பணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 06 என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட என்புக்கூட்டுத் தொகுதிகளில் சிறுவர்களுடைய இரண்டு என்புக் கூட்டு தொகுதி உட்பட 08 என்புக் கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

நேற்றுடன் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரையில் நடைபெற்ற அகழ்வுப் பணிகளின் போது, 302 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 298 என்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த சில [illegible] செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து சிறுவர்களின் என்புக் கூட்டுத் தொகுதிகள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

## வைத்தியசாலை...

புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே நேற்று கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் முறையற்ற நடத்தைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் (6) இரவு முதல் அவர் சாகும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டமொன்றை ஆரம்பித்திருந்த நிலையிலேயே, அவர் நேற்று அவசரமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுரேஷ் சலேயின் உடல்நிலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக அவரது சட்டத்தரணிகள் மற்றும் குடும்பத்தினர் தொடர்ச்சியாக எச்சரித்து வந்த நிலையிலும் அவர் உணவு, நீர் மற்றும் மருந்துகளை உட்கொள்ள மறுத்து வந்த நிலையிலுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந-7)









































Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தாய் மீது...

ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவரது மகன் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம்(6) இரவு இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குளம் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் கதவை உடைத்து, ஆறு பேர் கொண்ட குழுவொன்று வலுக்கட்டாயமாகப் பூசை செய்வதற்கு முற்பட்டுள்ளது.

குறித்த செயலை அந்த இடத்திலிருந்த கொலையுண்டவரின் தாய் தட்டிக்கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அக்குழுவினர் தாய் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பாக மகன் அவர்களிடம் கேட்கச் சென்றுள்ளார். இதன்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறிய நிலையில் அக்குழுவினர் மறைத்து வைத்திருந்த கத்தியால் அவரைக் குத்தியுள்ளனர்.

இதனால் பலத்த காயமடைந்த இளைஞனை அங்கிருந்தவர்கள் மீட்டு உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும், அவர் கொண்டு செல்லும் வழியிலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார். அத்துடன் காயமடைந்த தாயார் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் ஓமந்தை, நாவற்குளம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான சேதுபதி நிரோஜன் என்பவரே மரணமடைந்தவராவார்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளையும் ஏனைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் ஓமந்தைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந-7,250)

## கடல் தொழிலாளர்கள்...

றொழிலுக்காகச் சென்ற நிலையில் காணாமல் போன கடற்றொழிலாளர்கள் கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டு கரை சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

புங்குடுதீவுப் பகுதியை சேர்ந்த மூன்று கடற்றொழிலாளர்கள் நேற்று முன்தினம் (6) மதியம் கடற்றொழிலுக்கு சென்ற நிலையில் காணாமல் போயிருந்தனர்.

இதனையடுத்து அவர்களைத் தேடும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்நிலையில் கடற்றொழில் அமைச்சரின் பணிப்பின் பேரில் கடற்படையினர் தமது படகுகளில் நயினாதீவு மற்றும் அதனை அண்டிய கடற்பரப்பில் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில் கடற்றொழிலாளர்களைக் கண்டு மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை பாதுகாப்பாகக் குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு அழைத்து வரப்பட்டு, அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மீட்பு நடவடிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,33)


## மாப்பிள்ளை தேவை

01.வேலணை, இந்து, 1992, ரேவதி, MBBS doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32198)
02.அல்வாய் - கோப்பாய், இந்து, ரோகிணி, 1993, Phd, Lecture, canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33627)
03.தெல்லிப்பழை, இந்து, 1994, பூரட்டாதி, MBBS, MD, Doctor, USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (36611)
04.காரைநகர், இந்து, 1995, பூரம், BSc, Bank officer, UK citizen, born & brought up in uk பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33254)
05. கொக்குவில், இந்து, 1996, பூரட்டாதி electrical engineer, USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55426)
06.சுதுமலை, இந்து 1994, சுவாதி, CPA Accountant, Divorce, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33103)
07.தெல்லிப்பழை, இந்து, 1993, அவிட்டம், Masters, scientist, UK + France citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (56817)
08.குப்பிளான், இந்து, 1997, கேட்டை, Lawyer, Germany citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55147)
09.சரவணை, இந்து, 1993, அஸ்வினி, BSc software Engineer, Singapore citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54241)
10.நீர்வேலி, இந்து, 1996, பூராடம், A/L, IELTS, widow (விதவை) பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (52941)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (C-5799)

S.Sharma J.P
www.thaalee.com
077 189 0367
077 539 3728

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வயோதிபப் பெண்ணொருவரை வீட்டில் தங்கி இருந்து உதவி செய்யக் கூடிய பெண் தேவை. (உணவு, தங்குமிட வசதி உண்டு). சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (2400)

076 584 7149

முகவரி : உசன், மிருசுவில்.

## ஊர்க்கோழிக் குஞ்சுகள்




ஒரு மாத, ஒரு கிழமை, ஒரு நாள் ஊர்க்கோழி குஞ்சுகளை தினமும் பெற்றுக் கொள்ளலாம். (2401)

இடம் : சுழிபுரம்

077 332 2433


## மரண அறிவித்தல்

பிறப்பு 08 - 01 - 1939



இறப்பு 06 - 06 - 2026

### வியாழரத்தினம் தியாகராசா
(கைதடி நாவற்குழி)

கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வியாழரத்தினம் தியாகராசா அவர்கள் கடந்த 06.06.2026 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வியாழரத்தினம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் ரோகினிஅம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருஸ்ணராஜா சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரனும் கருணாகரன்(லண்டன்), கருணசீலி(சுவிஸ்), கருணகலா (ஆசிரியர் - யா/கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை), கர்ணரூபி (நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஞானேஸ்வரி(லண்டன்), சிவானந்தன் (அதிபர் - யா/நாவற்குழி மகா வித்தியாலயம்), தவானந்தம் (உரிமையாளர் - துவாரகை அரிசி உற்பத்திகள், நீர்வேலி) ஆகியோரின் மாமனாரும் துவாரகா (வைத்தியர் - சிலாபம் வைத்தியசாலை), யுவராஜ் (பொறியியலாளர்), கினோஜன் (கனடா), சாயினி(கனடா), அபிகிருஸ்ணா, அபிநயா, ஜொனத்தன் (சுவிஸ்), அகிஷன்(லண்டன்), அபிநயன்(லண்டன்), அமீரா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் வானகனின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2026) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் கைதடி நாவற்குழியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மறவன்புலவுவில் உள்ள தனிப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கைதடிநாவற்குழி,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்
(7811)


## வெறுப்பை நிராகரித்து மனிதநேயத்தை உயர்த்துவோம்

ஒவ்வொரு தகவலும் பகிரப்பட வேண்டியது அல்ல.

தீர்மானத்தை மீறிய உணர்ச்சிகளால் வெறுப்பான தகவல்கள் வேகமாக பரவுகின்றன.

மக்களை உயர்த்தும், சமூகங்களை வலுப்படுத்தும் மற்றும் மரியாதையை வளர்க்கும் தகவல்களை தெரிவு செய்து பகிருங்கள்.

நாம் விழிப்புணர்வுடன் வெறுப்பை நிராகரிப்போம்.

இந்த செய்தி SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது. (7775)

## வேலையாட்கள் தேவை

சங்கானையில் உள்ள பற் சிகிச்சை நிலையம் ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.
- சங்கானை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
- வயதெல்லை 18 – 24

தொடர்புகளுக்கு :
077 300 2189 (2398)

## மணமகள் தேவை

உத்தர நட்சத்திரம் 6 ம் இடத்தில் சூரியன் செவ்வாய் உள்ள அரச நியமனம் பெற்ற பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை. (7804)

075 121 7064

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பிரதான வீதியில் 07 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு.

- யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதி முகப்புடன் மூன்று பரப்புகளாக பிரிக்கப்பட்ட நிலையில் ஒருபரப்பின் விலை 1,200,000 (பன்னிரெண்டு இலட்சம்).
- வீடுகள் அமைப்பதற்கும் வியாபார நிலையங்கள் அமைக்கவும் உகந்த நிலம்.
- யாழ்.நகரில் இருந்து 4 Km தூரம்.

077 988 6389, 076 077 2674 (2399)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.